# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - மார்ச் 2018

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**3**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ..........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

### விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | .................................... பெயர் .................................... ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (....................................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .................................... பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .................................... பெயர் .................................... ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

- **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

**01)** துக்கத்தினால் பரதனுக்கு உடனடியாகப் பதில் கூறமுடியவில்லை. சிறிது நேரம் கழித்து தன்னைச் சமாளித்துக் கொண்டு "அண்ணா, உன்னுடைய பிரிவைத் தாங்காமல் தந்தையும் உயிர் நீத்தார்" என விம்மலுடன் கூறினான். தந்தை இறந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் இராமன் அடியற்ற மரம் போல விழுந்தான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் நீங்கி எழுந்தான். சகோதரர்கள் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டனர்.

- **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

*01)* ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைக் குறிக்கப் பயன்படும் தனிச்சொல்லை எழுதுக.

....................................................................................................................................

*02)* தகவல் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

....................................................................................................................................

*03)* இங்கு இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக.

....................................................................................................................................

*04)* "ஒருவருக்கொருவர்" என்பதனைப் பிரித்து எழுதுக.

....................................................................................................................................

*05)* உயிர்க்குறி விசிறியும் சுழியும் கொண்டமைந்த எழுத்து எது?

....................................................................................................................................

*06.)* "கூறுகின்றான்" என்பதன் இறந்தகால வடிவம் யாது?

....................................................................................................................................

*07.)* உயர்திணைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்று எழுதுக.

....................................................................................................................................

(7 x 1 = 7 புள்ளிகள்)

**02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

1) அரசாங்கம் இலவசமாக எமக்கு வழங்கும் பாடநூல்களை ................................... (பேணிப் / பேனிப்) பாதுகாப்போம்.

2) கணினி ஒரு ........................................... (மின்ணணுச் / மின்னனுச்) சாதனமாகும்.

3) தேயிலைத் தோட்டங்களில் பெருமளவிலான ஆண்களும், பெண்களும் கடினமாக .................................................................. (உளைக்கிறார்கள் / உழைக்கிறார்கள்)

4) கிடங்கு ஒன்றில் புதைத்து குப்பை ............................................. (கூளங்களற்ற / கூழங்களற்ற) சுற்றாடல் ஒன்றினை எம்மால் அமைக்க முடியும்.

(4 x 1 = 4 புள்ளிகள்)

**03) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) தாய், தந்தையரை இழந்தவன் :............................................................................

2) பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் :............................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

சுட்டெண் :..................

**04) பின்வரும் கூற்று சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் அடைப்பினுள்ளே எழுதுக.**

1) இளவரசன் நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டன. (..................)

2) "படித்தார்கள்" என்பது இறந்தகால பன்மை வினைச்சொல்லாகும். (.................)

(2 x 1 = 2 புள்ளிகள்)

**05) பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொல்லின் கருத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) புதியதோர் உலகத்தை உருவாக்க சிறுவர்களாகிய நாம் **திடசங்கற்பம்** பூணுவோம். .................

2) தன்னிடம் **அடைக்கலம்** என்று அடைந்தவர்களை எவ்வாறாயினும் காப்பாற்றும் சிறந்த குணம் படைத்தவன். ...................................................................

3) சீடன் அப் பெரியவரை **ஆச்சரியத்துடன்** பார்த்தான். .................................................................

(3 x 1 = 3 புள்ளிகள்)

**06) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) கரம்பு நிலத்தை உழவனும்
கண்டு நன்றாய் உழைத்தனன்
கரும்பும் நெல்லும் விளைந்திடும்
......................................... மாற்றினன். (களனியாக / கழனியாக)

2) எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை
............................................ கொன்ற மகற்கு. (செய்ந்நன்றி / செய்நன்றி)

(2 x 1 = 2 புள்ளிகள்)

**07. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

1) எமது / நோய் / பாதுகாத்தல் / நாம் / வேண்டும் / உடலை / வராமல்

.............................................................................................................................

(1 புள்ளி)

**08) கீழ்வரும் பழமொழியைப் பூரணப்படுத்துக.**

ஆற்றிலே போட்டாலும் ..................................................................... (1 புள்ளி)

**09) பின்வரும் கருத்துக்குரிய மரபுத்தொடரை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

அறிவு உண்டாதல் ...................................................................................... (1 புள்ளி)

**10) இவ் வாக்கியத்திற்கு பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஆகா எவ்வளவு அழகான கடற்கரை (1 புள்ளி)

**11) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1) Sky - ..................................... 2) Tree - .....................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**12) கீழ்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலப் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.**

1) வகுப்பறை - .................................... 2) கடிகாரம் - ....................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**13) இவ்வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கிலத்தில் எழுதுக.**


1) நான் நாளைக்கு வருவேன் - ...................................................................................

(1 புள்ளிகள்)



The National e-learning Portal for The General Education

**14)** **தரப்பட்டுள்ள படங்களுக்குரிய சிங்களப் பெயரை சிங்கள உச்சரிப்பில் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

*1)*  ..................................

*2)*  ..................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**15)** **பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

*1)* அலியா - ..................................................

*2)* உடப்பனின்ன - ..................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**16)** **சிறுவயது முதல் எம்மோடு சேர்ந்து படிப்பவர்கள், ஒன்றாகப் பழகுபவர்களை நாம் நண்பர்களாக வைத்துள்ளோம். அந்த வகையில் 'எனது ஆருயிர் நண்பன் / நண்பி' என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகள், எழுத்துக் கூட்டல் ஆகியன சரியாக அமைய வேண்டும்.)**

*1)* ................................................................................................................................

................................................................................................................................

*2)* ................................................................................................................................

................................................................................................................................


*3)* ................................................................................................................................

................................................................................................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)

- **வினாக்களுக்கான விடையை தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**


**17)** **இங்கு தரப்பட்டுள்ள இலக்கங்களைக் கொண்டு அமைக்கக் கூடிய**




*1)* மிகப் பெரிய எண்ணை விரித்து எழுதுக.

............... + ............... + ............... + ...............

*2)* இவ் எண்சட்டம் குறித்து நிற்கும் எண்ணை எண்பெயரில் எழுதுக.




................................................................................................

................................................................................................

**02.** **தரப்பட்டுள்ள உரோம எண்களை அவதானித்து விடை எழுதுக.**

**IX, VI, XIV**

**XIX, IV**

*1)* இவ் உரோம எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

................................................................................................

*2)* இங்குள்ள உரோம எண்களில் ஐந்து தீக்குச்சிகளைப் பயன்படுத்தி அமைக்கக் கூடிய உரோம எண்களை எழுதுக.

................................................................................................

**03.** **இவ் எண் கோலங்களில் அடுத்து வரும் எண்ணை எழுதுக.**


*1)* 7, 16, 24, 31, 37, ................

*2)* 180, 175, 165, 150, 130, ...............

**04)** 64 தேங்காய்களில் $\frac{3}{4}$ பங்கு விற்பனை செய்த பின்னர் எஞ்சியிருக்கும் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.......................................................................................

**05.**



1) இவ்வுருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதியைப் பின்னத்தில் தருக?

..........................................................................................

2) நீறந்தீட்டப்படாத பகுதியை தசமத்தில் எழுதுக.


..........................................................................................................................

**06.** ஆலயத் திருவிழாவிற்கு தினமும் 450 *l* குடிநீர் தேவை. அவ் ஆலயத்திலுள்ள குடிநீர்த் தாங்கியில் 5000 *l* குடிநீர் நிரப்பப்பட்டுள்ளது எனின், இத்தாங்கியிலுள்ள குடிநீர் எத்தனை திருவிழாக்களுக்கு முழுமையாகப் போதுமானது?

.................................... திருவிழாக்களுக்கு.


**07. தரப்பட்டுள்ள திண்மவுருக்கள் ஆக்கப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள தளவடிவங்களை வரைக.**

1)



.........................................................................................

2)



.........................................................................................

**08. பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவிற்கு சுவர்ணா காலை 7.30 மணிக்குச் சென்று, 8 மணித்தியாலங்கள் பாடசாலையில் தங்கி நின்று கலைவிழாவை முழுமையாகப் பார்த்துவிட்டு வீட்டிற்குச் சென்றாள்.**


1) சுவர்ணா பாடசாலையிலிருந்து வீட்டிற்குப் புறப்பட்ட நேரம் யாது?

..........................................................................................................................

2) இந் நேரத்தை நியம நேரமாக எழுதுக.

..........................................................................................................................

**09.**



**7cm**

**இங்கு தரப்பட்டுள்ள சதுரவடிவக் காணியின் ஒருபக்க நீளம் 7m ஆகும்.**

1) இதன் பரப்பளவு யாது? ....................................................................

2) சுற்றளவு யாது? ....................................................................

**10. பழ வியாபாரி ஒருவர் குறித்த நாளொன்றில் 845 தோடம்பழங்களையும், 1172 மாம்பழங்களையும், 1022 விளாம்பழங்களையும் விற்பனை செய்தார் எனின், அன்றைய தினம் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?**

.......................................................................................... பழங்கள்

The National e-learning Portal for The General Education

**11.** **வியாபார நிலையத்திற்குச் சென்ற நிலா ரூபாய் 125.00 பெறுமதியான கணித உபகரணப்பெட்டி ஒன்றையும், ரூபாய் 22.50 பெறுமதியான பேனாக்கள் இரண்டையும், ரூபாய் 10.00 பெறுமதியான பென்சில் ஒன்றையும் கொள்வனவு செய்த பின்னர், ரூபாய் 500.00 ஐக் கடைக்காரனிடம் கொடுத்தாள் எனின்,**

1) நிலா கொள்வனவு செய்த பொருட்களின் பெறுமதி யாது? ..........................................................

2) கடைக்காரன் வழங்கிய மிகுதிப் பணம் யாது? ..........................................................


**12.** **ஒரு பெட்டியில் 8 முட்டைகளை அடுக்கி வைக்கமுடியும். 195 முட்டைகளை அடுக்கி வைப்பதற்கு இவ்வாறான எத்தனை பெட்டிகள் தேவை?**

..................................................................................................................................

**13.** **நிலவனின் நிறை 24kg 750g ஆகும். அவனது அண்ணா நிலவனின் நிறையைப் போல இருமடங்குடன் 5kg 500g நிறையும் உடையவன் எனின், அண்ணாவின் நிறை யாது?**

................ kg ............... g

**14.**




1) தரப்பட்டுள்ள பானக்குழாயின் அளவை மில்லிமீற்றரில் எழுதுக.

...................................... மில்லிமீற்றர்

2) இங்குள்ள பென்சிலின் அளவை சென்ரிமீற்றரில் எழுதுக.

...................................... சென்ரிமீற்றர்

**15.** **இவ் அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.**


| **பொருள்** | **ஒன்றின் விலை** | **எண்ணிக்கை** | **ஒன்றின் விலை** |
|---|---|---|---|
| | **ரூபாய் சதம்** | | **ரூபாய் சதம்** |
| பேனா | .................................. | 3 | 48 . 00 |
| கலர்ப்பெட்டி | 45 . 00 | .................................. | 135 . 00 |
| வரைதற் புத்தகம் | 32 . 50 | 4 | .................................. |
| | | **மொத்தம்** | .................................. |

(15 x 2 = 30 புள்ளிகள்)

**18.** **கீழுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**01.** வருடம் முழுவதும் பூக்கும் தாவரம் எது?
1) முள்முருங்கை 2) பனை 3) தென்னை 4) வேம்பு

**02.** பழத்திற்கு வெளியே வித்துக் காணப்படும் பழம்
1) வெள்ளரிப்பழம் 2) தர்ப்பூசிணி 3) திராட்சை 4) முந்திரிகை

03. 

இங்கு காணப்படுவது

1) சுரங்கப் பாதை 2) பழைய கற்பாலம்

3) மதகு 4) அகழி

04. கொல்லன் கம்மாலையில் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் தொகுதி

1) நுகத்தடி, இடுக்கி, பட்டறைக்கல், இரும்பு வாள்

2) துருத்தி, பட்டறைக்கல், இடுக்கி, இரும்பு வாள்

3) அத்தாங்கு, துறப்பணம், தட்டுப்பொல், மரவாள்

4) இடுக்கி, துறப்பணம், சீவுளி, கரப்பு

05. இடவசதியற்ற இடங்களில் செய்யக் கூடியதும் பராமரிப்பது சுலபமானது, பாதுகாப்பது இலகுவானது மான பயிர்ச்செய்கை முறை

1) வீட்டுத் தோட்டம் 2) சேனைப் பயிர்ச்செய்கை

3) கலப்பு முறைப் பயிர்ச் செய்கை 4) மாற்றுமுறைப் பயிர்ச்செய்கை

06. பண்டைய மன்னர்கள் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட செயற்பாடு

1) அதிக குளங்களை அமைத்தமை.

2) விவசாயிகளுக்கு தண்டனை வழங்கியமை.

3) வெளிநாட்டுப் பொருட்களை தடை செய்தமை.

4) கடல் நீரை நன்னீர் ஆக்கியமை.

07. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் சரியான படிநிலை

1) உடலைத் தளர்த்துதல், மனதைத் தளர்த்துதல், மனவுறுதி, பிரார்த்தனை, உதிப்பு.

2) மலர்வு, உடலைத் தளர்த்தல், மனதைத் தளர்த்தல், பிரார்த்தனை, மனவுறுதி

3) மனதைத் தளர்த்தல், உடலைத் தளர்த்தல், மனவுறுதி, உதிப்பு, பிரார்த்தனை

4) மனதைத் தளர்த்தல், உடலைத் தளர்த்தல், மனவுறுதி, பிரார்த்தனை, உதிப்பு

08. தங்கக் கூரையுடன் காணப்படும் வழிபாட்டுத் தலம் அமைந்துள்ள மாவட்டம்

1) மாத்தளை 2) யாழ்ப்பாணம் 3) கண்டி 4) பொலன்னறுவை

09. கோடை வெயிலுக்குக் குளிர்ச்சியான நீரைப் பருகுவதற்கு ஏற்ப செய்யக் கூடிய பாரம்பரிய செயற்பாடு

1) குளிரேற்றியில் வைத்தல் 2) மண் பானையில வைத்தல்.

3) மின்விசிறிக்கு அருகில் வைத்தல் 4) ஜன்னலுக்கு அருகில் வைத்தல்.

10. உப்பிட்டுக் காய வைப்பதன் மூலம் நற்காப்புச் செய்யப்படும் உணவுப்பொருள்

1) இறைச்சி 2) மாம்பழம் 3) பனங்கிழங்கு 4) மீன்

11. நிலத்தின் மீது விழும் பல்வேறு கழிவுப்பொருட்களை சிறுசிறு துண்டுகளாக்கி உக்குவதற்கு உதவுபவை

1) மண்புழு, கறையான் 2) கறையான், இராமபாணம்

3) எலி, கறையான் 4) இராமபாணம், எலி

12. நாய், நரி, பூனை, குரங்கு போன்ற பிராணிகளின் மூலம் ஏற்படக் கூடிய நோய்

1) வாந்திபேதி 2) நீர் வெறுப்பு 3) ஆனைக்கால் 4) பிளேக்

13. பயிர்களுக்குத் தீங்கு செய்யும் பிராணி அல்லாதது

1) தேனீ 2) நத்தை 3) மயிர்க்கொட்டி 4) வண்டு

14. எமது நாட்டில் தேயிலைச் செய்கையை அறிமுகப்படுத்தி, ஆரம்பித்த அந்நியர்கள்

1) ஆங்கிலேயர் 2) போர்த்துக்கேயர் 3) ஒல்லாந்தர் 4) இஸ்லாமியர்


15. கிராமப் புறச் சிறுவர்கள் விரும்பி விளையாடும் கிராமிய விளையாட்டு

1) கிரிக்கெட் 2) ரெனிஸ் 3) உதைபந்து 4) கிட்டிப்புள்

**16.** பற்பசை கொள்வனவு செய்யும்போது கவனிக்க வேண்டிய தரச்சான்றிதழ்

1) ISO  2) SLS  3) SLDA  4) ISBN

**17.**




இவ் உபகரணத்தில் A எனக் குறிப்பிடப்பட்டிருப்பது

1) இரும்புக்கம்பி  2) அலுமினியக்கம்பி
3) செப்புக்கம்பி  4) சில்வர்கம்பி

**18.** தேசிய இலச்சினையில் வட்டத்தினுள் காணப்படும் வாளேந்திய சிங்கம் குறித்து நிற்பது

1) நாட்டையும், கட்டுக்கோப்பான மக்கள் கூட்டத்தையும்
2) நாட்டின் தலைவனை
3) நாட்டையும், வீரத்தலைவனையும்
4) வீரத்துடன் கூடிய நாட்டின் தலைவனை

**19.** பிராணிகளால் பரவும் வித்துக்களாவன

1) பனை, தேங்காய்  2) இறப்பர், எருக்கலை  3) ஆமணக்கு, வேம்பு  4) மா, தாமரை


**20.** எமது நாட்டிற்கே உரித்தான ஈரூடக வாழிகள்

1) மரத்தேரை, சிவப்புக் கழுத்துத்தவளை  2) சலமந்தரா, மரத்தேரை
3) சுண்டெலி, ஆமை  4) மரநாய், நீர்ப் பாம்பு

**21.** வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழிப்பது

1) மண்புழு  2) ஆந்தை  3) நாய்  4) நத்தை

**22.**



இவ் உடுத்தொகுதி

1) வேட்டைக்காரன்  2) விருச்சிகம்
3) பெருங்கரடி  4) கும்பம்

**23.** கிழங்குத் துண்டங்கள் மூலம் தம் இனத்தைப் பெருக்கிக் கொள்பவை

1) உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு  2) மரவள்ளிக்கிழங்கு, வற்றாளை
3) இஞ்சி, மரவள்ளிக்கிழங்கு  4) இஞ்சி, வற்றாளை

**24.** தேசப்படங்களில் நீர் நிலைகளைக் குறித்துக் காட்டப் பயன்படும் நியம நிறம்

1) நீலம்  2) கபிலம்  3) பச்சை  4) வெள்ளை

**25.** குறித்த பிரதேசத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட அவசர கலந்துரையாடலுக்காக அப் பிரதேச மக்களுக்கு அறிவித்தல் வழங்க பொருத்தமான சாதனம்

1) தொலைபேசி  2) தொலைக்காட்சி  3) வானொலி  4) ஒலிபெருக்கி


**26.** எமது நாட்டின் தேசிய மலர்

1) நீலோற்பலம்  2) அல்லி  3) நாகமலர்  4) அலரி

**27.** எல்லே விளையாட்டில் ஒரு குழு வீரர்களின் எண்ணிக்கை

1) 6  2) 7  3) 11  4) 16

**28.**



இச்செயற்பாடு

1) நண்டு நடை  2) சில்லு வண்டி நடை
3) குதிரை போல் ஓடுதல்  4) கொக்கு போல் ஒற்றைக்காலில் நிற்றல்.

**29.** அரசு எமக்கு இலவசமாக வழங்கும் சேவை

1) சுகாதாரம்  2) போக்குவரத்து  3) மின்சாரம்  4) தபால்

**30.** தரமான தேயிலையை நீரில் இட்டால் தோன்றும் நிறம்

1) கடுங்கபிலம்  2) இளமஞ்சள்  3) சிவப்பு  4) மஞ்சள்

(30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 03 இன் விடைகள்

**தரம் – 05** **3** **வினாத்தாள் – II**

**01.** 1) சகோதரர்கள் 2) செய்தி 3) அடியற்ற மரம்
4) ஒருவருக்கு + ஒருவர் 5) நீத்தார் / நீங்கி 6) கூறினான்
7) சகோதரர்கள்
(7 x 1) =7 புள்ளிகள்)

**02.** 1) பேணிப் 2) மின்னனுச் 3) உழைக்கின்றார்கள் 4) கூளங்களற்ற
(4 x 1) = 4 புள்ளிகள்)

**03.** 1) அநாதை 2) நடத்துநர் (2 x 1) = 2 புள்ளிகள்)

**04.** 1) பிழை 2) சரி (2 x 1) = 2 புள்ளிகள்)

**05.** 1) உறுதி 2) தஞ்சம் / சரணாகதி 3) அதிசயம் / வியப்புடன் / வியப்பு
(3 x 1) = 3 புள்ளிகள்)

**06.** 1) கழனியாக 2) செய்ந்நன்றி (2 x 1) = 2 புள்ளிகள்)

**07.** நாம் எமது உடலை நோய் வராமல் பாதுகாத்தல் வேண்டும். (1 புள்ளி)

**08.** அளந்து போடு (1 புள்ளி)

**09.** கண்திறத்தல் (1 புள்ளி)

**10.** ஆகா! எவ்வளவு அழகான கடற்கரை! (1 புள்ளி)

**11.** 1) வானம் 2) மரம் (2 x 1) = 2 புள்ளிகள்)



**12.** 1) Classroom 2) Clock (2 x 1) = 2 புள்ளிகள்)

**13.** I will come tomorrow,. (1 புள்ளி)

**14.** 1) பொத்த 2) கூம்பியா (2 x 1) = 2 புள்ளிகள்)

**15.** 1) யானை 2) துள்ளிப் பாயுங்கள் (2 x 1) = 2 புள்ளிகள்)

**16.** பொருத்தமான வாக்கியங்கள் எழுதி இருப்பின் புள்ளி வழங்குக. (3 x 2) = 6 புள்ளிகள்)

**17.** 1) 1) 7000 + 600 + 40 + 0 2) எண்ணாயிரத்து நானுற்று ஐந்து / எண்ணாயிரத்து நானூற்றைந்து
2) 1) XIX, XIV, IX, VI, IV 2) XIV, XIX
3) 1) 42 2) 105
4) 16
5) 1) $\frac{4}{10}$ 2) 0.6
6) 11
7) 1)  2) 
8) 1) பி.ப. 3.30 அல்லது 15.30 மணித்தியாலம்
2) 15.30 மணித்தியாலம்
9) 1) 49 சதுர சென்ரிமீற்றர்
2) 28cm
10) 3039
11) 1) 180ரூபாய் 2) 320 ரூபாய்
12) 25
13) 55kg 000g
14) 1) 20mm 2) 5cm
15) 1) 16.00 2) 3 3) 130.00 4) 313.00
(15 x 2 = 30 புள்ளிகள்)

**18.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 4 | 3) 2 | 4) 2 | 5) 4 | 6) 1 |
| 7) 1 | 8) 3 | 9) 2 | 10) 4 | 11) 1 | 12) 2 |
| 13) 1 | 14) 1 | 15) 4 | 16) 3 | 17) 3 | 18) 1 |
| 19) 3 | 20) 1 | 21) 2 | 22) 3 | 23) 1 | 24) 1 |
| 25) 4 | 26) 2 | 27) 4 | 28) 1 | 29) 1 | 30) 2 |

(30 x 1 = 30 புள்ளிகள்)

**(தெளிவாகவும் உறுப்பாகவும் விடையளித்தால் 1 புள்ளி வழங்குக.)**